**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம், சங்கரன்கோவில்**
**(சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்)**

**முன்னிலை: திரு. P. மகேந்திர வர்மா, B.A., B.L.,**
**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்**

**2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02-ஆம் நாள் வியாழக் கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 19-ஆம் நாள்)**

**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை அசல் மனு எண்.83/2019**
(CNR No.TNTS07-000945-2019

1. பாப்பாத்தி
2. சங்கீதா
3. காந்தியம்மாள்
4. மைனர் ராமலட்சுமி
5. மைனர் சங்கர்
6. பொன்னுத்தாய்

(மேற்படி மைனர் 4, 5 மனுதாரர்கள் அவர்களின் தாயாரும்
அடுத்த சிநேகிதியுமான 6 ம் மனுதாரர் மூலம்) ... மனுதார்கள்

/எதிர்/

1. தங்கராஜ்
2. செல்வம்
3. யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
புளியங்குடி அதன் கிளைமேலாளர் மூலம் ... எதிர்மனுதார்கள்

இம்மனுவானது கடந்த 12.11.2025 தேதியன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்.ந.அருணாச்சலம் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதார்கள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், மேற்படியார்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், மேற்படியார்கள் தோன்றா

தரப்பினராக்கப்பட்டும், 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர். பி.எஸ்.வேலாயுதம் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உ த் த ர வு</u>**

விபத்தினால் இறந்துபோன பொன்னுச்சாமி என்பவரின் இழப்புக்காக எதிர்மனுதாரர்களிடமிருந்து ரூ.25,00,000/-மும், அத்தொகைக்கு பின்வட்டியும் மற்றும் வழக்கு செலவுத்தொகையும் கோரி மனுதாரர்களால் இம்மனு இயக்க ஊர்தி சட்டம், பிரிவு 166-ன்கீழ் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:**

கடந்த 09.03.2018 ஆம் தேதியில் மாலை சுமார் 4.00 மணியளவில் இறந்துபோன பொன்னுச்சாமி மற்றும் அவரது நண்பர் முருகன் ஆகிய இருவரும் மாலை சுமார் 05.15 மணிக்கு சிந்தாமணிக்கு வடபுறம் உள்ள பெட்ரோல் பல்க் எதிரில் உள்ள பெட்டிக்கடையில் கலர் குடித்துவிட்டு இறந்துபோன பொன்னுச்சாமிக்கு சொந்தமான TN 72 U 3708 என்ற Hero Honda பைக்கில் ரோட்டை மேற்கிலிருந்து கிழக்காக கடந்து தெற்கு பார்த்து வந்தபோது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 76 X 1009 என்ற எண் கொண்ட Eacher லாரியை அதன் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து இறந்துபோன பொன்னுச்சாமி ஓட்டிச் சென்ற பைக்கில் மோதியதில் மேற்படியார் தூக்கி வீசப்பட்டு மேற்படியாருக்கு இடது கால் முட்டிற்கு கீழ் முறிந்தும், வலதுகால் முட்டு, வலது பிட்டி மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். எனவே 2ம் எதிர்மனுதாரர் மீது புளியங்குடி நகர காவல்நிலைய குற்ற எண்.694/2018 இதச பிரிவு 279, 304(A)இன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

2.2. இறந்துபோன பொன்னுச்சாமி விபத்திற்கு முன்பு நல்ல ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும், எவ்வித நோய் நொடியுமில்லாமல் பஞ்சுமிட்டாய் வியாபாரம் செய்து அதன் மூலம் மாதம் 1க்கு ரூ.18,000/-ம் வரை வருமானம் ஈட்டி குடும்பத்தை பராமரித்து வந்துள்ளார். இவ்விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரரின் TN 76 X 1009 என்ற வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையின் காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்களுக்கு விபத்தில் இறந்துபோன பொன்னுச்சாமியின் இழப்பிற்காக எதிர்மனுதாரர்கள் இழப்பீடாக ரூ.25,00,000/- கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். எனவே விபத்தில் 1 மற்றும் 6 மனுதாரர்களின் கணவரும், 3ம் மனுதாரரின் மகனும், 2, 4, 5 மனுதாரர்களின் தகப்பனாருக்கு ஏற்பட்ட உயிரிழப்பிற்காக 1ஆம் எதிர்மனுதாரரின் வாகனமானது 3 ஆம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் எதிர்மனுதாரர்கள் கூட்டாகவும், தனித்தனியாகவும் ரூ.25,00,000/-ம் கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

3. **<u>3ம் எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்:</u>**

மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் தவறானவை. கடந்த 09.03.2018 ஆம் தேதியன்று மாலை 5.15 மணியளவில் TN 76 X 1009 என்ற பதிவெண் கொண்ட லாரியை அதன் ஓட்டுநர் மதுரையிலிருந்து தென்காசி செல்லும் மெயின்ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக மெதுவாகவும், கவனத்துடனும் ஓட்டி வந்தார். அப்போது விபத்து சம்பவயிடத்தில் இறந்துபோன பொன்னுச்சாமி குடிபோதையில் தலைக்கவசம் அணியாமல் அவரது இருசக்கர வாகனத்தை மேற்கிலிருந்து கிழக்காக திடீரென்று கவனமின்றி திருப்பி லாரிமீது மோதிவிட்டதில் கொடுங்காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துபோய்விட்டார். இறந்துபோன பொன்னுச்சாமிக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது. எனவே 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. 1, 2 எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை எதுவும் தாக்கல் செய்யாமலும் இருந்து வந்ததால் ஒருதலைபட்சமாக கருதப்பட்டுள்ளார்கள்.

5. மனுதாரர்களின் மனுவுரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்த இத்தீர்ப்பாயம், இம்மனுவின் தீர்வுக்காக கீழ்க்கண்ட பிரச்சினைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ளது:

**ஆய்வுக்குரிய பிரச்சினைகள்:**

1. விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு காரணம்?
2. மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் அதை வழங்க பொறுப்புடையவர் யார்?
3. மனுதார்களுக்கு கிடைக்ககூடிய இழப்பீட்டு தொகை எவ்வளவு?
4. மனுதார்களுக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

6. மனுதாரர்கள் தரப்பில், 1ம் மனுதார் பாப்பாத்தி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வையார் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.18 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், மனுதார் தரப்பில் தனிநபர் சாட்சி மாரியப்பன் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு மேற்படியார் மூலம் சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதார் தரப்பில், சங்கரன்கோவில் யுனைடெடு இண்டியா இன்சூரன்ஸ் கம்பெனியின் கிளை மேலாளர் அருண் என்பவர் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படியார் மூலம் எ.ம.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.. இரு தரப்பு வாதங்கள் கூர்ந்து கேட்கப்பட்டன. சாட்சிய, சான்றாவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டன.

7. **பிரச்சினை எண்.1-க்கான தீர்வு:**

மனுதார்கள் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட இறந்துபோன பொன்னுச்சாமியின் முதல் மனைவியான ம.சா.1 பாப்பாத்தி தனது சாட்சியத்தில், கடந்த 09.03.2018 ஆம் தேதியில் மாலை சுமார் 4.00 மணியளவில் தனது கணவரான பொன்னுச்சாமியும் அவரது நண்பரான முருகன் என்பவரும் மாலை சுமார் 05.15 மணிக்கு சிந்தாமணிக்கு வடபுறம் உள்ள பெட்ரோல் பல்க் எதிரில் உள்ள பெட்டிக்கடையில் கலர் குடித்துவிட்டு இறந்துபோன பொன்னுச்சாமிக்கு சொந்தமான TN 72 U 3708 என்ற Hero Honda பைக்கில் ரோட்டை மேற்கிலிருந்து கிழக்காக கடந்து தெற்கு பார்த்து வந்தபோது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 76 X 1009 என்ற எண் கொண்ட Eicher லாரியை அதன் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து இறந்துபோன பொன்னுச்சாமி ஒட்டிச் சென்ற பைக்கில் மோதியதில் மேற்படியார் துாக்கி வீசப்பட்டு மேற்படியாருக்கு இடது கால் முட்டிற்கு கீழ் முறிந்தும், வலதுகால் முட்டு, வலது பிட்டி மற்றும் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மனுதாரர்கள் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட ம.சா.2 சாட்சியானவர் ம.சா.1 ன் சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார்.

7.2. மேலும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில், 1ம் மனுதாரரின் கணவர் இறந்துபோன பொன்னுச்சாமி 09.03.2018 ஆம் தேதியில் மாலை சுமார் 4.00 மணியளவில் புளியங்குடி கண்ணா தியேட்டர் அருகில் ஓர்க்ஷாப் வைத்துள்ள அவரது நண்பரான முருகன் என்பவரை பார்க்க சென்றபோது மேற்படியார்கள் இருவரும் மாலை சுமார் 05.15 மணிக்கு சிந்தாமணிக்கு வடபுறம் உள்ள பெட்ரோல் பல்க் எதிரில் உள்ள பெட்டிக்கடையில் கலர் குடித்துவிட்டு இறந்துபோன பொன்னுச்சாமிக்கு சொந்தமான TN 72 U 3708 என்ற Hero Honda பைக்கில் ரோட்டை மேற்கிலிருந்து கிழக்காக

கடந்து தெற்கு பார்த்து வந்தபோது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 76 X 1009 என்ற எண் கொண்ட Eicher லாரியை அதன் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து இறந்துபோன பொன்னுச்சாமி ஓட்டிச் சென்ற பைக்கில் மோதியதில் மேற்படியார் தூக்கி வீசப்பட்டு சம்பவயிடத்திலேயே பொன்னுச்சாமிக்கு இறப்பு ஏற்படுத்தியுள்ளார் என்பதாக 2 வது எதிர்மனுதாரர் மீது இதச பிரிவு 279, 304(ஏ)இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ம.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் ம.சா.ஆ.3 மாதிரி வரைபடம் ஆகியவற்றின் பரிசீலனையிலிருந்து விபத்தானது சிந்தாமணி, அந்தோணிச்சாமி பெட்ரோல் பல்க் எதிரே உள்ள மதுரையிலிருந்து - தென்காசி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்றுள்ளது என்பது தெரியவருகிறது.

7.3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட எ.ம.சா.1, 3ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் உதவி மேலாளர் ஆவார். அவர் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சி கிடையாது. எனவே மேற்படி எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியத்தின் மூலம் இறந்துபோன பொன்னுச்சாமி என்பவரின் கவனக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்படவில்லை.

7.4. எனவே மேற்படி மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம், 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 76 X 1009 என்ற எண் கொண்ட Eicher லாரியை அதன் ஓட்டுநரான 2ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவாக ஓட்டிவந்து பொன்னுச்சாமி ஓட்டிச் சென்ற பைக்கில் மோதியதில் மேற்படி பொன்னுச்சாமி இறந்துபோயுள்ளார் என்பது நிரூபணமாகிறது.

7.5. மேலும், 3ம் எதிர்மனுதார் தரப்பில், இறந்துபோன பொன்னுச்சாமி என்பவர் குடிபோதையில் தலைக்கவசம் அணியாமலும், முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தபோது, 2ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 76 X 1009 என்ற எண் கொண்ட Eicher லாரி மோதி விபத்து ஏற்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7.6. முதலில் இறந்துபோன பொன்னுச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டி விபத்திற்கு காரணமாக இருந்தாரா என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் தரப்பில் இறந்துபோன பொன்னுச்சாமி குடிபோதையில் இருந்ததன் காரணமாக வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதாக எவ்வித நேரடி சாட்சியமும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அளிக்கப்படவில்லை என்பதால் குடிபோதையில் வண்டி ஓட்டியதன் காரணமாக பங்கேற்பு கவனக்குறைவு உள்ளதாக 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் ஏற்கத்தக்கதாக இல்லை.

7.7. அடுத்ததாக, இறந்துபோன பொன்னுச்சாமி தலைக்கவசம் அணியாமல் வாகனத்தை ஓட்டி விபத்திற்கு காரணமாக இருந்தாரா என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், இது சம்மந்தமாக ம.சா.ஆ.4 இறந்துபோன பொன்னுச்சாமியின் பிரேத பரிசோதனை அறிக்கையை பரிசீலனை செய்கையில் பொன்னுச்சாமி விபத்தில் ஏற்பட்ட தலைக்காயத்தின் காரணமாக இறந்துபோயுள்ளார் என்பது தெரியவருகிறது. எனவே விபத்தின்போது இறந்துபோன பொன்னுச்சாமி தலைக்கவசம் அணிந்திருந்தால் தலைக்காயம் ஏற்பட்டு அவருக்கு ஏற்பட்ட இறப்பை தவிர்த்திருக்க இயலும் என இவ்வாயம் முடிவுக்கு வருகிறது. எனவே தலைக்கவசம் அணியாததன் காரணத்தினாலும், விபத்தை பொருத்து இறந்துபோன பொன்னுச்சாமிக்கு பங்கேற்பு கவமின்மை உள்ளதாக இவ்வாயம் தீர்மானிக்கிறது. மேலும் Rajendran Vs Prabakaran on 22

November 2024 எனும் முன் தீர்ப்பில் தலைக்கவசம் அணியாமல் இருந்ததற்காக 15% கவனமின்மை உள்ளதாக நிர்ணயித்துள்ளதன் அடிப்படையில் இறந்துபோன பொன்னுச்சாமிக்கு தலைக்கவசம் அணியாததை பொருத்து 15% கவனமின்மை உள்ளதாக இவ்வாயம் தீர்மானிக்கிறது.

7.8. அடுத்ததாக முதலில் இறந்துபோன பொன்னுச்சாமி ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி விபத்திற்கு காரணமாக இருந்தாரா என்பதை பொருத்து பரிசீலனை செய்கையில், இறந்துபோன பொன்னுச்சாமிக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்பதாக மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. எனவே ஓட்டுநர் உரிமம் இல்லாததன் காரணத்தினால் விபத்தை பொருத்து இறந்துபோன பொன்னுச்சாமிக்கு பங்கேற்பு கவனமின்மை உள்ளதாக இவ்வாயம் தீர்மானிக்கிறது. மேலும் United Insurance Company Limited, Divisional Office, Nagercoil Vs Manikanda prabu, 2023(1) TN MAC 334 எனும் முன் தீர்ப்பில் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதற்காக 10% கவனமின்மை உள்ளதாக நிர்ணயித்துள்ளதன் அடிப்படையில் இறந்துபோன பொன்னுச்சாமிக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதை பொருத்து 10% கவனமின்மை உள்ளதாக இவ்வாயம் தீர்மானிக்கிறது.

7.9. எனவே, மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து, விபத்தில் பொன்னுச்சாமி இறந்துபோனதற்கு பொன்னுச்சாமி ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், தலைக்கவசம் அணியாமலும் வாகனம் ஓட்டி வந்ததும், 2ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி வந்ததும் காரணம் என்பதால், விபத்திற்கு இறந்துபோன பொன்னுச்சாமிக்கு 25%ம், 2ம் எதிர்மனுதாரருக்கு 75%ம் பங்கேற்பு கவனமின்மை உள்ளது என இவ்வாயம் முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. **<u>பிரச்சினை எண்.2-க்கான தீர்வு</u>**:

மேலே கண்ட பிரச்சனை எண்.1 ல் இந்த விபத்தானது 1 ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரான 2 ம் எதிர்மனுதாரர் செல்வம் என்பவரின் கவனக்குறைவின் காரணமாக பொன்னுச்சாமி என்பவருக்கு விபத்து ஏற்பட்டது என தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.17 சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.67/2021 இல் மக்கள் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி 1 முதல் 5 மனுதாரர்கள் இற்நதுபோன பொன்னுச்சாமியின் வாரிசுதாரர்கள் ஆவார்கள் என்பதாலும், 6 ம் மனுதாரர் இறந்துபோன பொன்னுச்சாமியின் 2 வது மனைவி என்பதால் இறந்துபோன பொன்னுச்சாமியை சார்ந்திருப்பவர் என்ற முறையிலும் மேற்படி மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கத்தக்கது என இவ்வாயம் தீர்மானிக்கிறது.

8.2. மேலும் 2 ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவின் காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளது என்பதால் 2 ம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற TN 76 X 1009 என்ற எண் கொண்ட Eicher லாரியின் உரிமையாளரான 1 ம் எதிர்மனுதாரர் பகர பொறுப்பின் அடிப்படையில் இழப்பீடு கொடுக்கவேண்டியவர் ஆவார். மேலும் ம.சா.ஆ.5 TN 76 X 1009 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலனை செய்கையில் மேற்படி வாகனத்திற்கு 03.09.2018 ஆம் தேதி வரையில் காப்பீடு உள்ளது என்பதை அறியமுடிகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட காப்பீட்டு நிறுவனத்தின் கிளைமேலாளர், 1 ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு 3 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் வாகன காப்பீடு செய்யப்படவில்லை என்பதாக எவ்வித மறுப்பும் செய்யப்படவில்லை. எனவே 1 ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டாளர் என்ற முறையில் 3 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளது இவ்வாயம் முடிவு செய்கிறது.

8.3. எனவே மேற்கண்ட பரிசீலனைகளிலிருந்து விபத்துக்குள்ளான வாகனத்தின் உரிமையாளரின் காப்பீட்டாளர் என்ற நிலையில் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதாக உள்ள இழப்பீட்டுத் தொகையை மேற்படி விபத்திற்குள்ளான வாகனத்தின் காப்பீட்டாளரான 3ம் எதிர்மனுதாரரே வழங்க கடமைப்பட்டவர் என முடிவு செய்து அவ்வாறே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9. **பிரச்சினை எண்.3-க்கான தீர்வு**:

மனுதார்கள் தங்களது மனுவிலும், ம.சா.1 தனது சாட்சியத்திலும் இறந்துபோன பொன்னுச்சாமிக்கு விபத்தின்போது வயது 43 எனக் குறிப்பிட்டுள்ளனர். மேலும், இதுகுறித்து மனுதார்கள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.4 ஆன பிணக்கூறாய்வு அறிக்கையை பரிசீலனை செய்கையில், இறந்து போன பொன்னுச்சாமி என்பவரின் வயது விபத்து சமயத்தில் 42 என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விபத்தின்போது இறந்துபோன நபரின் வயது 42 என தீர்மானிக்கப்படுகிறது.

9.2. மனுதார்கள் தரப்பில், வழக்கு விபத்தில் இறந்து போன பொன்னுச்சாமி என்பவர் பஞ்சுமிட்டாய் வியாபாரம் செய்து அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.18,000/-ம் வரை வருமானம் ஈட்டி வந்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இறந்துபோன பொன்னுச்சாமியின் மாதம் வருமானம் ரூ.18,000/-ம் என்பதைக் காட்டும் வகையில் மனுதார்கள் தரப்பில் உரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, விபத்தில் இறந்து போனவரின் தோராய வருமானம் நிர்ணயிக்கப்படவேண்டும் என இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வருகிறது.

9.3. மேலும், தோராய மாத வருமானம் நிர்ணயம் செய்வது சம்பந்தமாக, மாண்புமிகு உச்ச நீதிமன்றம், ***Syed Sadiq and others //Vs// Divisional Manager United India Insurance Co., ltd., 2014 2 SCC 735*** என்ற வழக்கில், 2008-ம் வருடம் காய்கறி விற்கும் ஒரு நபரின் மாத வருமானம் ரூ.6,500/- (ரூபாய் ஆறாயிரத்து ஐநுறு) என்று தீர்மானித்துள்ளது என்றும், மேலும், ***Andal and others /Vs/ Avinav Kannan and others – 2019 (1) TN MAC 54 (DB)*** என்ற முன்வழக்கில், விலைவாசி உயர்வு புள்ளியியல் அடிப்படையில் (**Cost of inflation index**) **2014** ஆம் ஆண்டு மாத வருமானம் ரூ.11,085/- என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி முன்தீர்ப்புக்களின் அடிப்படையில், இறந்துபோன பொன்னுச்சாமிக்கு தோராய மாத வருமானத்தை நிர்ணயிக்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. எனவே, பொன்னுச்சாமி கடந்த 2018 ஆம் ஆண்டு இறந்துவிட்டதன் காரணமாக, மேற்படி முன் தீர்ப்பில் 2008 ஆம் ஆண்டு Cost of inflation index 129 என இருந்துள்ளதன் அடிப்படையில், மாத வருமானம் ரூ.6,500/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், 2018 ஆம் ஆண்டு பொன்னுச்சாமி இறந்து போயுள்ளதால், மேற்படியாரின் மாத வருமானம் ரூ.6,500 x 272/129 = ரூ.13,705/- வருகிறது. மேற்படி தொகையை ரூ.13,500/-ஆக எடுத்துக்கொள்ளலாம் என இவ்வாயம் கருதுகிறது. எனவே இறந்துபோன பொன்னுச்சாமியின் மாத வருமானம் ரூ.13,500/- என இவ்வாயம் நிர்ணயிக்கிறது.

9.4. வழக்கு விபத்தில் இறந்துபோன நபரின் மாத வருமானம் ரூ.13,500/- (ரூபாய் பதிமூன்றாயிரத்து ஐநூறு) என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில், ஷையாரின் வயது, விபத்து சமயத்தில் 42 என இவ்வாயம் தீர்மானித்துள்ள நிலையில், எதிர்கால வருமான எதிர்பார்ப்பு என்ற தலைப்பில், *National Insurance Co., Ltd., /Vs/ Pranay Sethi and other, reported in 2017 (2) TN MAC 609 (SC)* வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த வழி காட்டுதலின் படி 25% கூடுதல் தொகை சேர்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால், இறந்துபோன பொன்னுச்சாமியின் மாத வருமானம் ரூ.13,500 + 3,375/- = ரூ.16,875/- வருகிறது. எனவே மேற்படி இறந்துபோன

பொன்னுச்சாமியின் ஆண்டு வருமானம் ரூ.16,875 X 12 = ரூ.2,02,500/- வருகிறது. மேற்படி தொகையில், இறந்து போன நபரை சார்ந்து ஆறு நபர்கள் உள்ளதால், *Sarla Varma and others /Vs/ Delhi Transport Corporation and others, reported in 2009 ACJ 1298 SC* என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின்படி, ஷை இறந்துபோனவரின் சொந்த செலவுக்காக 1/4 பங்குத் தொகையான ரூ.50,625/- கழிக்கப்படும்போது, மீதமுள்ள தொகையான ரூ.1,51,875/- மனுதார்களுக்கான ஆண்டு வருமான இழப்பு ஆகும். இறந்துபோன பொன்னுச்சாமியின் வயதானது விபத்தின் போது 42 என இவ்வாயம் ஏற்கனவே தீர்மானித்துள்ள நிலையில், *Sarla Varma and others /Vs/ Delhi Transport Corporation and others, reported in 2009 ACJ 1298 SC* என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின்படி பெருக்கல் குறியீடு 14 என கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அவ்வாறெனில் மனுதார்களுக்கான மொத்த வருமான இழப்பு ரூ.1,51,875/- x 14 = ரூ.21,26,250/- வருகிறது. எனவே, மேற்படி தொகையான ரூ.21,26,250/-ஐ மொத்த வருமான இழப்பு என்ற தலைப்பின் கீழ் மனுதாரர்கள் பெற உரிமை உடையவர்கள் என இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

9.5. மேலும், *National Insurance Co., Ltd., /Vs/ Pranay Sethi and other, reported in 2017 (2) TN MAC 609 (SC)* என்ற வழக்கில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் படி இவ்வழக்கில் சொத்திழப்பு என்ற *(Loss of Estate)* தலைப்பின் கீழ் ரூ.15,000/-மும், ஈமக்கிரியை என்ற *(Funeral Expenses)* தலைப்பின் கீழ் ரூ.15,000/-மும், 1 ஆம் மனுதாரர் இறந்துபோன பொன்னுச்சாமியின் முதல் மனைவி என்பதால், அவருக்கான கணவர் துணை இழப்பிற்காக *(Loss of Consortium)* ரூ.40,000/-மும், 2 ஆம் மனுதாரர் இறந்துபோன பொன்னுச்சாமியின் மகளாக உள்ளதால், அவருக்கான தந்தை துணை இழப்பிற்காக *(Loss of Consortium)* ரூ.40,000/-மும், 3 ம் மனுதாரர் இறந்துபோன பொன்னுச்சாமியின் தாயார் என்பதால் அவருக்கான மகன் துணை இழப்பிற்காக *(Loss of Consortium)* ரூ.40,000/-மும், 4, 5 மனுதாரர்கள் இறந்துபோன

பொன்னுச்சாமியின் 2 வது மனைவியின் பிள்ளைகள் என்பதால் அவர்களது தந்தை துணை இழப்பிற்காக தலா *(Loss of Consortium)* ரூ.40,000/-மும், 6 ம் மனுதாரர் இறந்துபோன பொன்னுச்சாமியின் 2 வது மனைவி என்பதால் அவரது கணவர் துணை இழப்பிற்காக *(Loss of Consortium)* ரூ.40,000/-மும் பெற மனுதாரர்கள் உரிமை உடையவர்கள் என தீர்மானிக்கப்படுகின்றது. மேலும், மனுதார்களுக்கு போக்குவரத்து செலவு என்ற தலைப்பில் ரூ.2,000/-ம் கிடைக்கத்தக்கது என இவ்வாயம் தீர்மானிக்கிறது. எனவே, மேற்கண்ட வகையில் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகை பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்படுகிறது.

| வ.எண் | இழப்பீடு தலைப்புகளில் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | மொத்த வருமானம் சார்ந்த இழப்பிற்காக<br>1,51,875/- x 14 = ரூ.21,26,250 | ரூ. 21,26,250.00 |
| 2 | ஈமச்சடங்கு செலவிற்காக | ரூ.15,000.00 |
| 3 | சொத்திழப்புக்காக | ரூ.15,000.00 |
| 4 | 1 மற்றும் 6 மனுதாரர்களின் கணவர் துணை இழப்புக்காக<br>40,000X2 = ரூ.80,000/- | ரூ.80,000.00 |
| 5 | 2, 4, 5 மனுதாரர்களின் தந்தை துணை இழப்புக்காக<br>40,000X 3 = ரூ.1,20,000/- | ரூ.1,20,000.00 |
| 6. | 3 ம் மனுதாரரின் மகன் துணை இழப்புக்காக | ரூ.40,000.00 |
| 7. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.2,000.00 |
| | மொத்தம் | ரூ.23,98,250/- |

9.6. எனவே மேலே சொல்லப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் மனுதாரர்களுக்கு ரூ.23,98,250/- கிடைக்கத்தக்கதாக உள்ளது. மேலும், வழக்கு விபத்திற்கு

இறந்துபோன பொன்னுச்சாமியின் பங்கேற்பு கவனமின்மை 25% என ஏற்கனவே இவ்வாயம் தீர்மானித்துள்ளபடியால், மேற்படி தொகையில் 25% தொகையான ரூ.5,99,562.50/-ஐ கழிக்கும்பட்சம், ரூ.17,98,687.5/- தொகையானது மனுதாரர்களுக்கு இழப்பீடாக கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது. எனவே, மனுதாரர்களுக்கு ரூ.17,98,687.5/- இழப்பீட்டு தொகையை 3ம் எதிர்மனுதார் செலுத்தக் கடமைப்பட்டவர் என பிரச்சினை எண்.3-க்கு மேற்சொன்னவாறு தீர்வு காணப்படுகிறது.

10. **பிரச்சினை எண்.4-க்கான தீர்வு:**

மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.17,98,687.50/-ம் 3 ஆம் எதிர்மனுதாரிடமிருந்து கிடைக்கத்தக்கது என்று மேலே இவ்வாயம் முடிவு செய்துள்ள நிலையில், ஷை தொகைக்கு மனுதாருக்கு வட்டியும், இவ்வழக்கு செலவுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்று தீர்மானித்து, அவ்வாறே இத்தீர்ப்பாயம் பிரச்சினை எண்.4-க்கு மேற்சொன்னவாறு தீர்வு காண்கிறது.

11. (i) இறுதியாக, இம்மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

(ii) 3 ஆம் எதிர்மனுதாரர், மனுதாரர்களுக்கு மொத்த இழப்பீடாக ரூ.17,98,687.50 /-ஐ செலுத்த உத்தரவிடப்படுகிறது.

(iii) மேற்படி இழப்பீட்டுத் தொகையினை மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதி வரையிலும் ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் மற்றும் செலவுத்தொகையும் சேர்த்து 3 ஆம் எதிர்மனுதாரர் இரண்டு மாத காலத்திற்குள் இத்தீர்ப்பாயத்தின் வங்கி கணக்கில், அதாவது, Indian Bank, Sankarankovil Branch in A/c No:6455813233, IFSC Code: IDIB000S008 மூலம் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது.

(iv) மேற்படி இழப்பீட்டு தொகையில் 1 முதல் 6 மனுதாரர்களுக்கு தலா ரூ.2,99,781.25/- கிடைக்கத்தக்கது என உத்தரவிடப்படுகிறது.

(v) மேற்படி இழப்பீட்டு தொகை மற்றும் அதற்கான வட்டி மற்றும் மனுச் செலவுத்தொகை ஆகிய அனைத்தையும் மனுதாரர்கள், அவரவர்களுக்கு கிடைத்த தொகையின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இவ்வாயத்தில் தொகை செலுத்தப்பட்டவுடன் உடனடியாக பெற்றுக்கொள்ளலாமென்று உத்தரவிடப்படுகிறது.

(vi) 4, 5 இளவர் மனுதாரர்களுக்குரிய பங்குத் தொகையானது மேற்படி இளவர்கள் தகுந்த வயதடையும் வரையில் 4, 5 மனுதாரர்கள் வைத்துள்ள நாட்டுடமையாக்கப்பட்டுள்ள வங்கியில் வைப்பீடு செய்யப்படவேண்டும்மென்றும், மேற்படி தொகைக்குரிய வட்டியை மட்டும் 6 மாதங்களுக்கொருமுறை 4, 5 மனுதாரர்களின் வங்கி கணக்கிற்கு பரிமாற்றம் செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

(vii) மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகைக்கான குறைவுபடும் நீதிமன்ற கட்டணத்தை இவ்வாயத்தில் செலுத்த மனுதாரர்களுக்கு 10 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.04.02 17:36:02 -0300

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை
தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்**:

ம.சா.1 திருமதி.பாப்பாத்தி (1ம் மனுதார்)

ம.சா.2 திரு.மாரியப்பன்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**:

எ.சா.1 திரு. அருண் ([யுனைடடு இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி உ தவி மேலாளர்)

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**:

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | ---- | முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | --- | பார்வை மகஜர் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | --- | மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | --- | சடலக்கூறாய்வு சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | --- | TN 72 U 370 என்ற வானத்தின் ஆய்வறிக்கை |
| ம.சா.ஆ.6 | - | ஆதார் அட்டை ஜெராக்ஸ் அசலுடன் ஒப்பிடப்பட்டது |
| ம.சா.ஆ.7 | - | 1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.8 | --- | 2ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.9 | -- | 2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.10 | --- | 3ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.11 | --- | 3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.12 | --- | 4ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.13 | --- | 4ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.14 | --- | 5ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.15 | --- | 5ம் மனுதாரரின் (6ம் மனுதாரர்) வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.16 | --- | 6ம் மனுதாரர் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.17 | --- | 6ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |
| ம.சா.ஆ.18 | --- | சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.67/2021 நீதிமன்ற உத்தரவின் சான்றிட்ட நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**:

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | --- | TN 76 X 1009 Eicher Lorry ன் பாலிசி நகல் |

MAHINDRAVARMA P

Digitally signed by MAHINDRAVARMA P
Date: 2026.04.02 17:35:52 -0300

இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டுக் கோருரிமை

தீர்ப்பாய நடுவர், சங்கரன்கோவில்.

**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டு கோருரிமை**
**தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) சங்கரன்கோவில்**

**இயக்க ஊர்தி விபத்து இழப்பீட்டு கோருரிமை**
**அசல் மனு எண்.83/2019**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள் 02.04..2026**